**In the Court of the District Munsif, Eraniel**

Original Suit No.96/2016 Date:19.01.2024

(P.W.1)- **ஃபரூக்**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

07.10.1986 தேதியிட்ட இஸ்லாமிக் சர்வீஸ் சொசைட்டியின் பதிவு சான்றிதழ் (சான்றிட்ட நகல்) வா.சா.ஆ.20 ஆகும். புகைப்படங்கள் எண்ணம்-6 மற்றும் குறுந்தகடுடன் கூடியது வா.சா.ஆ.21 ஆகும். 13.04.2000 தேதியிட்ட கடிதம் (அசல்) வா.சா.ஆ.22 ஆகும். 13.01.2014 தேதியிட்ட பள்ளி ஆய்வாளரால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அனுப்பப்பட்ட கடிதம் (அசல்) வா.சா.ஆ.23 ஆகும். வாதி பெயரிலுள்ள மின் கட்டண ரசீதுகள் எண்ணம்-4 (அசல்) வா.சா.ஆ.24 ஆகும். 03.07.2015 தேதியிட்ட பள்ளி ஆய்வாளரால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அனுப்பப்பட்ட கடிதம் (அசல்) வா.சா.ஆ.25 ஆகும். 23.02.2016 தேதியிட்ட தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தால் அனுப்பப்பட்ட கடிதம் வா.சா.ஆ.26 ஆகும். 23.02.2016 தேதியிட்ட இரணியல் குற்றவியல் நடுவர் நீதிமன்ற ஆண்டு பட்டிகை வழக்கு எண் 4/2018-இல் தாக்கல் செய்யப்பட்ட தனி புகார் (சான்றிட்ட நகல்) வா.சா.ஆ.27 ஆகும். மேற்படி தனி புகாருக்கு குற்றம் சாட்டப்பட்டவரால் தாக்கல் செய்யப்பட்ட 31.05.2018 தேதியிட்ட எதிருரை (சான்றிட்ட நகல்) வா.சா.ஆ.28 ஆகும். 30.01.2012 தேதியிட்ட குளச்சல் காவல்நிலையத்தில் வாதியால் கொடுக்கப்பட்ட புகார் மனுவின் நகல் வா.சா.ஆ.29 ஆகும். 30.01.2012 தேதியிட்ட உதவி கண்காணிப்பாளருக்கு வாதியால் கொடுக்கப்பட்ட புகார் மனுவின் நகல் வா.சா.ஆ.30

ஆகும். 17.02.2012 தேதியிட்ட மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு வாதியால் கொடுக்கப்பட்ட புகார் மனுவின் நகல் வா.சா.ஆ.31 ஆகும். 08.04.2012 தேதியிட்ட மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு வாதியால் கொடுக்கப்பட்ட புகார் மனுவின் நகல் வா.சா.ஆ.32 ஆகும். வாதியின் மனைவியால் குளச்சல் காவல் நிலைய ஆய்வாளருக்கு கொடுத்த புகார் மனுவின் நகல் வா.சா.ஆ.33 ஆகும். 22.02.2022 தேதியிட்ட மாவட்ட பதிவாளரால் முதன்மை கல்வி அலுவலர் கன்னியாகுமரி இஸ்லாமிக் சொசைட்டிக்கு அனுப்பிய கடிதம் (அசல்) வா.சா.ஆ.34 ஆகும். 29.04.2015 தேதியிட்ட மாவட்ட பதிவாளரால் வாதிக்கு அனுப்பிய கடிதம் (அசல்) வா.சா.ஆ.35 ஆகும். 2013-ஆம் வருடம் தகல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வாதியால் பெறப்பட்ட தகவல் (அசல்) வா.சா.ஆ.36 ஆகும். உதவி காவல் கண்காணிப்பாளரிடமிருந்து வாதியால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல் (அசல்) வா.சா.ஆ.37 ஆகும். நிஜாமுதீன் என்பவரால் 3-ஆம் பிரதிவாதிக்கு ஏற்படுத்தி கொடுத்த குத்தகை ஆவணம் (அசல்) வா.சா.ஆ.38 ஆகும். 05.06.2009 தேதியிட்ட கிரையப் பத்திரம் (அசல்) வா.சா.ஆ.39 ஆகும். 05.09.2005 தேதியிட்ட குத்தகை ஆவணம் (அசல்) வா.சா.ஆ.40 ஆகும். 02.09.2011 தேதியிட்ட குத்தகை ஒப்பந்த ஆவணம் (அசல்) வா.சா.ஆ.41 ஆகும். 23.03.2015 தேதியிட்ட பொது தகவல் வழங்கும் அலுவலரால் வாதிக்கு அனுப்பிய தகவல் (அசல்) வா.சா.ஆ.42 ஆகும்.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க வழக்கு விசாரணைக்காக பாதியுடன் நிறுத்தி வைக்கப்படுகிறது.

(ஒப்பம்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல் (பொறுப்பு)